Pamphlet

# மீலாத் விழாவின் மகிமை

(Tamil)



اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ وَالصَّلٰوةُ وَالسَّلَامُ عَلٰى سَيِّدِ الْمُرْسَلِيْنَ اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ ؕ بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ؕ

# மீலாத் விழாவின் மகிமை

❁ அய்யாமுல்லாஹ் (இறைவனின் தினங்களை) ஞாபகம் செய்வது புனித குர்ஆனின் கட்டளையாகும். (ஜுஸ்உ 13, இப்றாஹீம் 5 மஹ்ஹூதன்) மேலும் இறைவனின் தினங்களில் மிகவும் புனிதமானது "கண்மணி நாயகம் صَلَّى اللّٰهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் பிறந்த தினமாகும்." ஏனெனில் அனைத்து தினங்களும் இந்த முபாரகான தினத்தின் காரணத்தினாலே பரகத் பெற்றது. ❁ புனித குர்ஆன் இறைவனின் அருட்கொடை மீது சந்தோஷம் அடையுமாறு நமக்கு கட்டளையிடுகிறது. (ஜுஸ்உ 11, யூனுஸ் 58) ❁ மேலும் நபிய்யெ கரீம் صَلَّى اللّٰهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களை அகிலம் அனைத்திற்கும் இறைவனின் அருட்கொடை என்பதாக புனித குர்ஆனே அறிவிக்கிறது. (ஜுஸ்உ 17, அல் அன்பியா 107) மீலாத் தினத்தில் சந்தோஷம் அடைவது குர்ஆனுடைய கட்டளைக்கேற்ப அமல் செய்வதாகும் என்பது நன்கு விளங்குகிறது. (இதாகதுல் ஆசாம், பக்கம் 96) நமது இன்னுயிர் முஸ்தஃபா صَلَّى اللّٰهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் திங்கட்கிழமைகளில் நோன்பு நோற்று தமது பிறந்த தினத்தை கொண்டாடியுள்ளார்கள். எவ்வாறெனில், ஹழ்ரத் ஸய்யிதுனா அபூ கதாதா رَضِیَ اللّٰهُ تَعَالٰى عَنْهُ அவர்கள் கூறுகிறார்கள், அண்ணல் நபி صَلَّى اللّٰهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களிடம் திங்கட்கிழமையின் நோன்பைப்பற்றி வினவப்பட்டபோது, "அந்த தினத்தில்தான் நான் பிறந்தேன் மேலும் அதே தினத்தில்தான் என்மீது வஹி இறக்கப்பட்டது" எனக்கூறினார்கள். (முஸ்லிம், பக்கம் 591, ஹதீஸ் 198) ❁ அபூலஹப் இறந்தபின் அவன் குடும்பத்தினர் சிலர் அவன் மிகவும் கஷ்டத்தில் இருப்பதை கனவில் கண்டு, என்ன கிடைத்தது? என்று கேட்டதற்கு, உங்களைப் பிரிந்து எனக்கு எந்தவொரு நலவுமில்லை எனக்கூறி விட்டு, தனது பெருவிரலின் கீழ் உள்ள ஓட்டையின் பக்கம் சைக்கினை செய்தவனாக, அடிமைப் பெண்ணான ஸுவைபாவை விடுதலை செய்த இந்த விரலில் இருந்தே எனக்கு தண்ணீர் கிடைக்கிறது எனக்கூறினான். (முஸன்னஃப் அப்துர் ரZஸ்ஸாக், 9/9, ஹதீஸ் 16661 – உம்ததுல் காரி, 14/44, ஹதீஸ் 5101) இந்த ரிவாயத்தின் கீழ் ஸய்யிதுனா ஷெய்க் அப்துல் ஹக் முஹத்திஸ் தெஹ்லவி عَلَيْهِ رَحْمَةُ اللّٰهِ الْقَوِی அவர்கள் அறிவிக்கின்றார்கள்: இந்த சம்பவத்திலே மீலாத் ஷரீஃப் செய்பவர்களுக்கு மாபெரும் ஆதாரம் உள்ளது. எவர்கள் பெருமானார் صَلَّى اللّٰهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களின் பிறந்த தினத்திலே சந்தோஷம் கொண்டாடுகிறார்களோ, மேலும் பணம் செலவழிக்கின்றார்களோ அதாவது அண்ணலார் صَلَّى اللّٰهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் பிறந்த செய்தியைக்கேட்டு சந்தோஷமடைந்து, தனது அடிமைப் பெண்ணை (ஸுவைபாவை) பாலூட்டுவதற்காக விடுதலை செய்த அபூலஹபைப்போன்ற ஒரு காஃபிருக்கு அதன் பகரம் வழங்கப்பட்டதென்றால், அன்னவர்களுடைய மீலாதிற்காக சந்தோஷமடைகின்ற, பணத்தை செலவழிக்கின்ற ஒரு முஸ்லிமுடைய நிலை என்னவாக இருக்கும்! ஆனால், மீலாத் ஷரீஃபின் இத்தகைய நிகழ்ச்சிகள் பாட்டு, இசை நிகழ்ச்சி போன்றவற்றை விட்டும் சுத்தமாக இருக்க வேண்டியது அவசியமாகும். (மதாரிஜுன் நுபுவ்வஹ், 2/19) ❁ **மீலாத் விழா என்றால் என்ன?** மீலாத் விழா என்பது கருணை நபி நாதர், கண்மணி நாயகம் صَلَّى اللّٰهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களுடைய சிறப்புக்கள், அற்புதங்கள், நன்னடத்தைகள், நிலைமைகள், வாழ்வு, பால்குடி மேலும் அன்னவர்களின் வருகைப்பற்றிய சம்பவங்களை நம்பகமான கிதாபுகளிலிருந்து பயான் நிகழ்த்தக்கூடிய முபாரகான இஜ்திமாவாகும். (சுபுலுல் ஹுதா வர்ரஷாத், 1/363 மஹ்ஹூதன்) ஸத்ருஷ் ஷரீஆ முஃப்தி முஹம்மத் அம்ஜத் அலி அஃலமி رَحْمَةُ اللّٰهِ تَعَالٰى عَلَيْه அவர்கள் அறிவிக்கின்றார்கள்: இந்த விடயங்களை (கண்மணி நாயகம் صَلَّى اللّٰهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களின் சிறப்புக்கள், அற்புதங்கள் போன்றவற்றை) ஞாபகப்படுத்துவது ஹதீஸ்களிலும் உள்ளது, அல்குர்ஆனிலும் உள்ளது. முஸ்லிமானவர் ஒரு நிகழ்ச்சியிலே பயான் செய்தால், மாறாக இந்த விடயங்களை சொற்பொழிவாற்றுவதற்காகவே ஒரு நிகழ்சிசியை ஏற்பாடு செய்தால், அது கூடாத விடயமாக ஆகுவதற்கு எவ்வித காரணமும் கிடையாது. அந்நிகழ்ச்சிக்காக மனிதர்களை அழைப்பது மேலும் அதில் கலந்துக்கொள்வது நலவின்பால் அழைப்பதே ஆகும். எவ்வாறெனில், பயான் மற்றும் பேரணியின் அறிவிப்புகள் கொடுக்கப்படுகின்றன, துண்டுப்பிரசுரம் அச்சிட்டு பங்கிடப்படுகின்றன மேலும் பத்திரிக்கைகளின் அதைப்பற்றிய கட்டுரைகள் வெளியிடப்படுகின்றன. இந்த காரணங்களினால் அந்நிகழ்ச்சிகள் கூடாத விடயமாக ஆகுவதில்லை. அப்படியான நினைவுகளுக்காக அழைப்பு விடுப்பதால் அந்த சபைகளை கூடாததும், பித்அத் என்றும் கூற முடியாது. (பஹாரெ ஷரீஅத், 3/644) ❁ **மீலாத் விழா கொண்டாடும் சட்டம்:** "அஹ்லுஸ் ஸுன்னத்தின் மத்ஹபில் மீலாத் விழாவின் மஜ்லிஸ் மிகச்சிறந்த விரும்பத்தக்க விடயமாகவும், மிக உயர்தரமான நல்ல விடயங்களில் நின்றும் உள்ளதாகும்." (அல்ஹக்குல் முபீன், பக்கம் 100) **மீலாத் விழா கொண்டாடுவதன் சிறப்புக்களும், பரகத்துகளும்:** மீலாத் விழா கொண்டாடுபவர்களுக்கு அல்லாஹ் عَزَّوَجَلَّ வின் புறத்திலிருந்து தீன், துன்யாவுடைய எண்ணற்ற அருட்கொடைகள் கிடைக்கின்றன. எவ்வாறெனில், ஹழ்ரத் ஸய்யிதுனா அப்துர் ரஹ்மான் இப்னு ஜவ்Zஸி رَحْمَةُ اللّٰهِ تَعَالٰى عَلَيْه அவர்கள் குறிப்பிடுகிறார்கள்: மீலாத் விழாவின் மீது மகிழ்ச்சி அடையக்கூடியவர்களுக்காக, அந்த மகிழ்ச்சி நரத்தை விட்டும் தடையாக ஆகிவிடும். யார் மீலாத் விழாவின் சந்தோஷத்தில் ஒரு திர்ஹம் செலவு செய்கிறாரோ, நபி பெருமானார் صَلَّى اللّٰهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் அவருக்காக ஷஃபாஅத் செய்வார்கள், அல்லாஹ் அவருக்கு ஒரு திர்ஹத்திற்று பகரமாக பத்து திர்ஹம்களை வழங்குவான். பெருமானாரின் உம்மத்தினரே! உங்களுக்கு வாழ்த்துக்கள்! நீங்கள் துன்யா, ஆகிரத்தில் அதிகமான நன்மைகளின் உரிமையாளராக ஆகவேண்டும். ஹழ்ரத் ஸய்யிதுனா அஹ்மத் முஜ்தபா, முஹம்மத் முஸ்தஃபா صَلَّى اللّٰهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களின் மீலாத் விழாவை கொண்டாடுபவர்களுக்கு பரகத், கண்ணியம் மேலும் நன்மை கிடைக்கும், முத்துக்களிலான தலைப்பாகையும், பச்சை வண்ண ஆடையும் அணிந்தவராக சுவனம் நுழைவார்.

எண்ணற்ற மாளிகைகள் அவருக்கு வழங்கப்படுவதோடு, ஒவ்வொரு மாளிகையிலும் ஹூர்லீன் இருக்கும். நபி பெருமானார் صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் மீது அதிகமாக ஸலவாத் கூறுங்கள், மீலாத் விழாவை கொண்டாடி அதை நன்கு பரப்புங்கள். (மஜ்மூஃ லதீஃபுன் நபி, பக்கம் 281) ஹாபிழுல் ஹதீஸ், இமாம் அபுல் கைர் முஹம்மத் பின் அப்துர் ரஹ்மான் ஸஹாவி رَحْمَةُ اللهِ تَعَالٰى عَلَيْه அவர்கள் அறிவிக்கிறார்கள்: மீலாத் விழா கொண்டாடுபவர்களுக்கு அந்த அமலின் பரகத்தினால் மாபெரும் கிருபைகள் வெளியாகின்றன. (சுபுலுல் ஹுதா வர்ரஷாத், 1/363) ஹழ்ரத் ஸய்யிதுனா இமாம் அஹ்மத் பின் முஹம்மத் கஸ்தலானி رَحْمَةُ اللهِ تَعَالٰى عَلَيْه அவர்கள் கூறுகிறார்கள்: "மீலாத் தினங்களில் மீலாத் விழாக்களை கொண்டாடுவதன் பிரயோஜனங்களில் இந்த விடயம் அனுபவரீதியாக காணப்பட்டதாகும். அதாவது, அந்த வருடம் நிம்மதியாக அமையும். மீலாத் தின இரவுகளை பெருநாளாக ஆக்கிக்கொண்டவர்கள் மீது அல்லாஹ் عَزَّوَجَلَّ அருள்பாளிப்பானாக." (மவாஹிபுல் லதுனிய்யா, 1/148) மீலாத் விழா கொண்டாடுபவர்களுக்கு மகான்களின் வார்த்தைகளில் சுவனத்தின் நன்மாராயமும் உள்ளது. ஷெய்கெ முஹக்கிக் ஹழ்ரத் ஷாஹ் அப்துல் ஹக் முஹத்திஸ் தெஹ்லவி رَحْمَةُ اللهِ تَعَالٰى عَلَيْه அவர்கள் அறிவிக்கிறார்கள்: மதீனத்து மாமன்னர் صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் பிறந்த இரவில் சந்தோஷம் கொண்டாடுபவர்களுக்கான நற்கூலி என்னவென்றால், அல்லாஹ் عَزَّوَجَلَّ தனது கருணையைக்கொண்டு அவர்களை ஜன்னாதுன் நஈமில் நுழைய வைப்பான். முஸ்லிம்கள் துவக்கத்திலிருந்தே மீலாதை கொண்டாடி வருகிறார்கள். மேலும் பிறந்த தின சந்தோஷத்தில் விருந்துகள் கொடுப்பவர்களாகவும், உணவு சமைப்பவர்களாகவும் இன்னும் ஸதகாக்களும், தானதருமங்களும் வழங்குபவர்களாகவும், சந்தோஷத்தை வெளிப்படுத்துபவர்களாகவும் மேலும் மனம் திறந்து செலவழிப்பவர்களாகவும் இருக்கின்றனர். அதேபோல், கண்மணி நாயகம் صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் பிறந்த தினத்தை ஞாபகம் செய்யும் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வதோடு, தனது இல்லங்களையும் அலங்கரிக்கின்றார்கள். இப்படியான நல்ல விடயங்களின் பரகத்தால் அந்த மனிதர்கள் மீது அல்லாஹ் عَزَّوَجَلَّ வின் ரஹ்மத் இறங்கிக்கொண்டிருக்கிறது. (மாஸபத மினஸ் சுன்னா, பக்கம் 74 முலக்கஸன்) **அறிஞர்கள், முஹத்திஸீன்களின் அறிவிப்புகள்:** ❁ ஹழ்ரத் ஸய்யிதுனா அப்துர் ரஹ்மான் இப்னு ஜவ்Zஸி رَحْمَةُ اللهِ تَعَالٰى عَلَيْه அவர்கள் அறிவிக்கிறார்கள்: இந்த செயலில் (மீலாத் விழா கொண்டாடுவதில்) ஷைத்தானுக்கு அவமானமும், ஈமான் உடையவர்களுக்கு வலிமையும் உள்ளது. (சுபுலுல் ஹுதா வர்ரஷாத், 1/363) ❁ இமாம் ஜலாலுத்தீன் அப்துர் ரஹ்மான் சுயூத்தி رَحْمَةُ اللهِ تَعَالٰى عَلَيْه அவர்கள் அறிவிக்கிறார்கள்: மீலாத் விழா கொண்டாடுபவர்கள் நன்மையை பெறுவார்கள், ஏனெனில், அதில் நாயகம் صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களின் கண்ணியத்தையும், பிறந்த தினத்தின் மகிழ்ச்சியையும் வெளிப்படுத்தப்படுகிறது. (அல்ஹாவீ லில் ஃதாவா, 1/222) ❁ புகாரியின் விரிவுரையாளர், ஹழ்ரத் ஸய்யிதுனா அஹ்மத் பின் ஹஜர் அஸ்கலானி رَحْمَةُ اللهِ تَعَالٰى عَلَيْه அவர்கள் அறிவிக்கிறார்கள்: நன்றியை வெளிப்படுத்துவதற்காக மீலாத் விழாவின் இஜ்திமாக்களை செய்வது, உணவளிப்பது மேலும் இவ்வாறான ஏனைய நன்மையான காரியங்கள் மற்றும் சந்தோஷத்தை வெளிப்படுத்துவது எங்களுக்கு விரும்பத்தக்க விடயமாகும். (அல்ஹாவீ லில் ஃதாவா, 1/230) ❁ ஹழ்ரத் ஸய்யிதுனா அபூ மூஸா Zஸர்ஹுனி رَحْمَةُ اللهِ تَعَالٰى عَلَيْه அவர்கள் ரஸூலுல்லாஹி صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களை கனவிலே கண்டு, மீலாதின் சந்தோஷத்தில் ஏற்பாடுகள் செய்வதைப்பற்றி வினவியபோது, நபி பெருமானார் صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் கூறினார்கள். 'مَنْ فَرِحَ بِنَا فَرِحْنَا بِهٖ' அதாவது யார் நம்மைக்கொண்டு சந்தோஷமடைகிறார்களோ, நாம் அவரைக்கொண்டு சந்தோஷமடைகிறோம். (சுபுலுல் ஹுதா வர்ரஷாத், 1/363)

அமீரெ அஹ்லுஸ் ஸுன்னத், தஃவதே இஸ்லாமியின் ஸ்தாபகர், ஹழ்ரத் அல்லாமா மௌலானா அபூ Bபிலால் முஹம்மத் இல்யாஸ் அத்தார் காதிரி دَامَتْ بَرَكَاتُهُمُ الْعَالِيَه அவர்களின் விடிகாலை வசந்தம் எனும் சிறுநூலிலிருந்து தெரிவு செய்யப்பட்ட சில மதனி முத்துக்களை சுருக்கமாக கண்காணிக்கவும்:

(1) இன்னுயிர் முஸ்தஃபா صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் திங்கட்கிழமை நோன்பு நோற்று தமது பிறந்த தினத்தை கொண்டாடியுள்ளார்கள், தாங்களும் நாயகத்தின் ஞாபகத்தோடு ரபீஉல் அவ்வல் 12ம் தினம் நோன்பு நோற்றுக்கொள்ளுங்கள். (2) 11ம் மாலையில் அல்லது 12ம் நாள் குளித்துக்கொள்ளுங்கள். முடியுமானால் இந்த பெருநாட்களின் பெருநாளுக்கு கண்ணியம் கொடுக்கும் எண்ணத்துடன் தேவையான அனைத்து பொருட்களையும் புதியதாக வாங்கிக்கொள்ளுங்கள். (3) மீலாத் விழாவின் சந்தோஷத்தில் ஹுகூகுல் இபாதை பாதிக்கும் வகையில் எவ்வித வேலையும் செய்யாதீர்கள். (4) அனைத்து இஸ்லாமிய சகோதர/ சகோதரிகளும் சுன்னத்தான முறையில் தனது வாழ்க்கையை அமைத்துக்கொள்ள நிய்யத் வையுங்கள். (5) மீலாத் விழாவின் சந்தோஷத்தில் மஸ்ஜித், வீடு மேலும் கடைகளில் பச்சை நிற கொடியை பறக்க விடுவதோடு, Bபல்புகளின் மூலம் வெளிச்சமாக்குங்கள். ஆனால் மின்சார சபையோடு தொடர்பு கொண்டு ஆகுமான முறையில் அலங்கரிக்கும் ஏற்பாடுகளை செய்யுங்கள். (6) மீலாத் ஊர்வலத்தில் முடியுமான அளவு வுழூவோடு இருப்பதோடு, தொழுகையை ஜமாஅத்துடன் நிறைவேற்றுங்கள். (மேலதிக விபரங்களுக்கு அமீரெ அஹ்லுஸ் ஸுன்னத் ஹழ்ரத் அல்லாமா மௌலானா அபூ Bபிலால் முஹம்மத் இல்யாஸ் அத்தார் காதிரி دَامَتْ بَرَكَاتُهُمُ الْعَالِيَه அவர்களின் விடிகாலை வசந்தம் எனும் சிறுநூலை வாசிக்கவும்.)

**நன்மையான காரியங்களில் உறுதிப்பாட்டையும், சுன்னத்தான முறையில் வாழ்வை அமைத்துக்கொள்ளவும் தஃவதே இஸ்லாமியின் மதனி சூழலில் இணைந்திருங்கள்.**